10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 06 ஞாயிற்றுக்கிழமை 06 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## பொலிஸ்க்கு வாள்வெட்டு

### நாரந்தனையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே06

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும், பொலிஸ் உத்தியோகத்தரொருவர் யாழ். நாரந்தனை பகுதியில் நேற்றுக் காலை வாள்வெட்டுக்கு இலக்கானதால், அந்தப் 06 ▶

## எரிபொருளும் விலையேறும்

கொழும்பு, மே 06

பெற்றோலின் விலையை 20 ரூபாவாலும் டீசலின் விலையை 12 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு ஏதுவாக விலைச் சூத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைச் சூத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட போதும் அதற்கு ஒப்புதல் 06 ▶

## மாகாண சபையைத் தாருங்கள் மாற்றிக் காட்டுகிறேன் பாருங்கள்

### தூண்டில் போடுகிறார் டக்ளஸ்



யாழ்ப்பாணம், மே 06

"வடக்கு மாகாணசபையைப் பொறுப்பெடுத்து அதை அர்த்தமுள்ள நிர்வாகமாகச் செயற்படுத்த விரும்புகின்றேன்" என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி சேவை ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து 06 ▶

## யார் செயலாளர்? இழுபறி முடிந்தது





யாழ்ப்பாணம், மே 06

பெரும் இழுபறிக்குப் பின்னர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரின் பதவிக்கு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக இருந்த எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று நியமிக்கப்பட் 06 ▶

# புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடரும்

### அரசு முடிவு

கொழும்பு, மே 06

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதெனவும், அதனை இந்த வருட இறுதிக்குள் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைப்படுத்துவதெனவும் அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அரசுக்குள் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாகவும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் அரசில் இருந்து விலகியமையாலும் புதிய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கப் பணிகள் கைவிடப்படும் நிலைக்குச் சென்றது. மகிந்த 06 ▶

## மாட்டிறைச்சிக் கடை நீர்வேலியில் தீக்கிரை



யாழ்ப்பாணம், மே 06

நீர்வேலி, பருத்தித்துறை வீதியில், அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு செல்லும் வீதிக்கு அருகில் இருந்த மாட்டிறைச்சிக் கடை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 06 ▶

## தந்ததைத் திருப்பித் தா!

### அமைச்சர் மனோகணேசனுக்கு மைத்திரி கட்டளை



கொழும்பு, மே.06

கடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர் மனோ கணேசனிடம் கையளிக்கப்பட்ட சில பொறுப்புக்களை மீண்டும் தன் வசம் திருப்பித் தருமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார் 06 ▶

## சகலரும் பதவி விலகுக!

### ஊடக அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவு

கொழும்பு, மே 06

தகவல் ஊடகத்துறை அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனங்களிலும் பணியாற்றும் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோரை உடன் இராஜினாமா செய்யுமாறு தகவல் ஊடகத்துறை அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் பணிப்பின் பேரில் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மாத்திரம் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருப்பார் எனவும் கூறப்படுகின்றது.(அ)

## சூரிய வெப்பம் இன்று உச்சம்

கொழும்பு, மே.06

நாட்டின் சில பகுதிகளில் இன்று அதிக வெப்பநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களிலும், குருநாகல், கம்பஹா, மாத்தளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் இந்த வெப்பநிலை நிலவும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது. 06 ▶

## கள்ளத்தோணியில் வந்தவர்கள் கைது

கொழும்பு, மே 06

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் முகாமிலிருந்து சட்டவிரோதமாகப் படகில் தாயகம் திரும்பிய 10 பேர் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை, கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்டவர்களே இவ்வாறு கைது செய்யப் 06 ▶

## வாள்வெட்டுக் கும்பல் சுன்னாகத்தில் கைது

யாழ்ப்பாணம், மே 06

அண்மைக்காலமாக இடம்பெற்ற பல்வேறு குற்றச்சம்பவங்களுடன் தொடர்புடைய, வாள்வெட்டுக் குழுவினைச் சேர்ந்த 5 பேர் வாள்களுடன் நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸாரின் பிடியில் சிக்கினர்.

யாழ்ப்பாணம் 06 ▶

## திருமலைத் துறைமுகம் ஜப்பானுக்குத் தாரைவார்ப்பு?



கொழும்பு, மே 06

திருகோணமலைத் துறைமுகத்தை ஜப்பானிடம் இலங்கை அரசு கையளிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயின் சிறப்பு ஆலோசகர் கலாநிதி ஹிரோரோ இசுமி தலைமையிலான ஜப்பானிய அதிகாரிகளின் சிறப்புக் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது. 06 ▶

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# நடுக்கடலில் எல்லைக் கூட்டம்

கொழும்பு, மே 06

இலங்கை - இந்தியக் கடற்படைகளுக்கிடையிலான, 29 ஆவது அனைத்துலக கடல் எல்லைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள கடலில், இந்தியக் கடற்படைக் கப்பலான சுமித்ராவில் நடந்த இந்தக் கூட்டத்தில், கடல்சார் பாதுகாப்பு, குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

11 அதிகாரிகளைக் கொண்ட இலங்கைத் தரப்பிலான குழுவுக்கு வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் முடித்த கமகே, தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு கடற்படை பிராந்தியத்துக்கான கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் அலோக் பட்னாகர் தலைமையிலான இந்திய அதிகாரிகள் குழுவில் 9 அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர். (அ)

# தளபதியைச் சந்தித்த தூதுவர்



கொழும்பு, மே.06


இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூயுவான், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை இராணுவத்துக்கும் சீன இராணுவத்துக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் தொடரும் என்றும், இன்னும் கூடுதலான பயிற்சி வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றும் சீனத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், ஒரு பாதை ஒரு அண் திட்டத்தின் முக்கியத்துவம், அதனால் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் ஏற்படக் கூடிய நன்மைகள் குறித்தும் இராணுவத் தளபதிக்கு, சீனத் தூதுவர் இதன்போது விளக்கமளித்தார். (அ)

# விபத்தில் இளைஞன் சாவு



கொழும்பு, மே.06

மினுவாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது நண்பருடன் வெசாக் பார்க்கச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளை அவர் பரிசோதிக்க முயன்ற போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் 20 வயதுடைய இளைஞன் உயிரிழந்த நிலையில் அவரது நண்பர் படுகாயங்களுடன் மினுவங்கொட மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மினுவாங்கொட சந்தியில் உள்ள மின்சார தூணில் தலை மோதுண்டமையினாலேயே இளைஞர் உயிரிழந்துள்ளதாக மரண விசாரணையில் தெரியவந்துள்ளது. உயிரிழந்த இளைஞனின் இறுதி நிகழ்வில் மோட்டர் சைக்கிள் அணி வகுப்பு மூலம் சடலம் மாயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இளைஞனின் உயிரை பறிந்த விபத்து தொடர்பான சிசிடீவி காணொளி ஒன்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனைவியைக் குத்திக் கொலை செய்த கணவன்

திருகோணமலை, மே 06

திருகோணமலை - பாலையூற்று பகுதியில் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் கணவர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பாலையூற்று முருகன் கோயிலடியைச் சேர்ந்த, நல்லிதன் தமயந்தி (வயது-26) என்பவரே, இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாகவே, இவ்வாறு மனைவியை கணவன் தாக்கி கொலை செய்துள்ளதாக, ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



உயிரிழந்த பெண்ணின் சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரான இராசையா ரேஹன் (வயது- 34) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# பறந்துபோன மயில் பஸ்ஸில் கிடைத்தது

கொழும்பு, மே 06

காலஞ்சென்ற பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வீட்டில் இருந்து காணாமல் போன "ரணமயுர பதக்கம்" நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவெல - கொள்ளுப்பிட்டி தனியார் பஸ் ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில், இந்தப்பதக்கம் மீட்கப்பட்டுள்ளது.

லெஸ்டர் ஜெம்ஸ் பீரிஸின் இறுதிக் கிரியை நிகழ்வின் போது, இந்தப் பதக்கம் அவரது வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளம் தாயின் சடலம் மீட்பு கணவன், குழந்தை மாயம்

மட்டக்களப்பு, மே.06

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்தாறுமூலை விஷ்ணு கோவில் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இருந்து, இளம் தாய் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வந்தாறுமூலை விஷ்ணு கோவில் வீதியில் வசிக்கும், அழகரத்தினம் டிசாந்தினி (வயது -24) எனும் இளம் குடும்பப் பெண்ணே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம், வீட்டின் வாசல் கதவருகே மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் இடம்பெற்றபோது, குறித்த பெண்ணின் 31 வயதான கணவனும், ஒரு வயதுக் குழந்தையும் வீட்டில் இருக்கவில்லை எனவும், கணவரின் அலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# இந்திராபுரம் விரைவில் மக்களிடம் கையளிப்பு




பளை, மே 06

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யலகமண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேச அபிவிருத்தி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, முகமாலை இந்திராபுரம் பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதியை உரிமையாளர்களிடம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. குறித்த பகுதியில் நிலக்கண்ணி அபாயம் இருந்தமையால் அந்தக் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது அந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளமையால், உரியவர்களிடம் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளதாக, இந்தக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது. (அ)





எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 06 மே 2018 ethirolimedia@gmail.com

# அடடா, என்னவொரு யோசனை!

ஆடான ஆடெல்லாம் தீனுக்கு அழ, நொண்டியாடு பாலுக்கு அழுத கதையாக, தமிழர்களுக்கு ஆயிரத் தெட்டுப் பிரச்சினைகள் இருக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு மதுபானசாலைகூட இல்லையே என்று ஆதங்கப்பட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில், கிளிநொச்சியில் சட்டவிரோத மதுப்பாவனை அதிகரித்துவிட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது சிவனேயென்று வாயை வைத்துக்கொண்டிருக்காமல், முந்திரிக்கொட்டை போல முந்திக்கொண்டு, " யாழ்ப்பாணத்திலே அரச அங்கீகாரம் பெற்ற 64 மதுபான சாலைகள் இருக்கின்றன. ஆனால் இங்கு ஒன்றுகூட இல்லை. எனவே கிளிநொச்சியில் மதுபானச் சாலைகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டால், அதன் பின்னர் சட்டவிரோத மதுப்பாவனை இருக்காது" என்று, தன் அரிய கண்டுபிடிப்பைத் தீர்வாகச் சொல்லிவிட்டு எல்லோரையும் பெருமிதத்தோடு பார்த்திருக்கிறார் அவர்.

தமிழ் மக்களுக்குத் திரும்பிய இடமெல்லாம் பிரச்சினை. இனப்பிரச்சினை தொடக்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணி விடுவிக்காத பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, விலைவாசிப் பிரச்சினை, கல்வித்தர வீழ்ச்சியால் பிரச்சினை, கஞ்சாவால் பிரச்சினை, வாள்வெட்டுக் கும்பலால் பிரச்சினை என்று நின்றாலும், இருந்தாலும், தடுக்கி விழுந்தாலும் கூட பிரச்சினையின் மீதுதான் தடுக்கிவிழ வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள் இதுபோன்ற மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு கண்ணில் தெரியாது. அப்படியே தெரிந்தாலும் கூட, இது எங்கள் பிரசினையில்லையே, மக்களின் பிரச்சினைதானே என்ற எண்ணத்தோடு, தலையை வேறுபக்கமாகத் திருப்பிவிடுவார்கள்.

ஆனால் இந்த மதுபானசாலை இல்லாமை போன்ற பிரச்சினைகளுக்கு மட்டும் சரியாகக் களத்தில் குதித்து, மூக்கை நுழைத்து, கருத்துச் சொல்லி, பின்னர் மூக்குடைபட்டுப் போவது இப்படியான 'கைப்புள்ளைகளுக்கு' வழக்கமாகிவிட்டது.

"யாழ்பாணத்திலே மீளக்குடியேறியோருக்கு உடனடியாக வீட்டுத்திட்டங்கள் கிடைக்கின்றன. ஆனால் இங்கு அப்படிக் கிடைப்பதில்லை. எனவே கிளிநொச்சியில் புதிய வீட்டுத்திட்டங்களுக்காகக் குரல் கொடுப்பேன்" என்று, மக்களுக்குத் தேவையான பிரச்சினைக்கு அவர் தன் யோசனையை முன்வைத்திருந்தால் அது ஆரோக்கியமானதாக இருக்கும். ஆனால், எல்லாப் பிரச்சினைகளையும் விட இப்போது கிளிநொச்சியில் மதுபான சாலை ஒன்று கூட இல்லையே என்ற குறைதான் இந்த மக்கள் பிரதிநிதிக்குப் பெரிதாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான் அப்படிப்பட்ட ஒரு வடிகட்டிய முட்டாள்தனமான கருத்தை அவர் வெளியிட்டு, வாங்கிக் கட்டி வருகின்றார்.

நல்லவேளையாக அந்தக் கூட்டத்தில், தவறான பாலியல் குற்றங்கள் அதிகரித்துவிட்டதாக யாரும் சுட்டிக்காட்டியிருக்கவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் எங்கள் ஐடியாமணி முந்திக் கொண்டு " தாய்லாந்தில் சட்டபூர்வமான விபசார விடுதிகள் இருப்பதால் அங்கு அவை குறைவு. ஆனால் கிளிநொச்சியில் அப்படியான விடுதிகள் ஒன்று கூட இல்லை. எனவே இங்கும் சட்டபூர்வமான விபசார விடுதிகளைத் திறக்க வேண்டும்" என்று சொல்லியிருப்பார்.

இப்படியான அறிவுக்கொழுந்துகள், மக்கள் பிரதிநிதியாக இருக்கும்போது இந்த நாடும், நாட்டு மக்களும் நாசமாய்ப் போவதைத் தவிர வேறுவழியேதுமில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஒன்றுபட்ட அஞ்சலிக்கு முன்னணியும் இணக்கம்



யாழ்ப்பாணம், மே 06

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நடத்த அனைவரும் ஒத்துழைப்போம்என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் நேற்று முன்தினம் 4 ஆம் திகதி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்ட இனவழிப்பின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறவுள்ளது.

இன அழிப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் உரிமைக்காக நடாத்தப்பட்ட ஆயுதமேந்திய போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறைபடிந்த நாளாகும். அந்த நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனவழிப்புத் தினமாகும்.

இந்த நாளை ஓரிடத்தில் நினைவு கூருவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்துத் தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாள் நினைவேந்தலின் முக்கியத்துவம் என்பது நினைவு கூரல் என்பதற்கு அப்பால் தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் சர்வதேச குற்றவியல் நீதி மன்றுக்கு கொண்டு செல்லப்படல் வேண்டும் அல்லது சர்வதேச சிறப்புக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணைக்கான குரல் ஒருமுகப் படுத்தி வலுப்படுத்தப்படல் வேண்டும் என்பதாகும்.

மேற்படி நினைவேந்தலை ஓரிடத்தில் ஒற்றுமையாக நடத்த ஒத்துழைக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 30.04.2018ஆம் திகதி வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் "ஒற்றுமை என்ற பெயரில் எமது மக்களின் அரசியல் வேணவாக்களை நீத்துப்போகச் செய்யும் நோக்கமோ தமிழ் மக்களுக்கான நீதி வேண்டிய பயணத்தில் முட்டுக்கட்டைகளாக இருப்போரை அரவணைக்கும் நோக்கமோ இல்லை "என்பதனை உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் அவர்களது கோரிக்கைக்கு மதிப்பளித்து முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வை பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நடாத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தீர்மானித்துள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் தாயக மண்ணில் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை தமிழ் மக்களுக்குள்ளது. எனவே முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு அன்புரிமையுட ன் வேண்டிக் கொள்வதுடன், நேரில் செல்ல முடியாதவர்கள் இனவழிப்பு போரில் இறந்த எம் உறவுகளின் ஆத்மசாந்திக்காக பிராத்திக்குமாறும் வேண்டுகின்றோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வேண்டும் எமக்கு வேலை மீண்டும் யாழில் போராட்டம்




யாழ்ப்பாணம், மே.06

தங்களது வேலைவாய்ப்பை உறுதி செய்ய வலியுறுத்தி வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் யாழில் கவனயீர்ப்பு போராட்டத்தினை மாவட்ட செயலகத்துக்கு முன்னால், நேற்று முன்னெடுத்தனர்.

இதன்போது, தற்போது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நேர் முகத்தேர்வுகளின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் உட்பட தகுதியுள்ள சகலருக்கும் வேலைவாய்ப்பை வழங்கவேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் வடமாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குவதை அரசாங்கம் கவனத்திற் கொள்வதுடன், 35 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கும் விசேட தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விடயங்களை வலியுறுத்து கொழும்பில் ஒன்றிணைந்த பட்டதாரிகளினால் எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள போராட்டத்திலும் தாம் பங்கு கொள்ள இருப்பதுடன் இவ்விடயத்தை வலியுறுத்தி வட மாகாண ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றையும் எதிர்வரும் நாட்களில் தாம் முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# கொட்டிய மழையால் தணிந்தது வெப்பம்

கிளிநொச்சி, மே.06

பல மாதங்களுக்கு பின் கிளிநொச்சியின் பல பகுதிகளில் நேற்றுப் பெரும் மழை பெய்துள்ளது. இதனால் பொது மக்களுக்கும் விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கடந்த சில மாதங்களாகக் கிளிநொச்சி மாவட்டம் கடும் வறட்சிக்கு முகம் கொடுத்து வந்தது. கடும் வெப்ப நிலை காரணமாகப் பொது மக்கள் உட்பட விலங்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இந்த நிலையில் நேற்றுப் பெய்த மழை கடும் வெப்ப நிலையைத் தனித்துள்ளது. இவ்வாறு சில தினங்களுக்கு மழை பெய்யும் இடத்து ஓரளவுக்கு வறட்சியிலிருந்து கிளிநொச்சி மாவட்டம் தன்னை பாதுகாத்துக்கொள்ள கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

# டேர்டெவில்ஸை வீழ்த்தியது ஹைதராபாத் சன்ரைஸர்ஸ்

ஹைதராபாத், மே 06

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ஹைதராபாத் சன்ரைஸர் அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டெவில்ஸ் அணி, ஷாவ் (65), ஐயர் (44), பான்ட் (18), சங்கர் (23 ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க 20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 164 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய ஹைதராபாத் சன்ரைஸர் அணி, 19.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் 7 விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கியது அந்த அணி.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், ஹலெஸ் (45), தவான் (33), வில்லியம்சன் (32 ஆட்டமிழக்காமல்), பாண்டே (21), யூசுப் பதான் (27) ஆகியோர் சிறப்பாக ஆடியிருந்தனர்.

## இன்று நாளும் கோளும்


06.05.2018 ஞாயிற்றுகிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 23 ஆம் நாள்

ஷஷ்டி பி.ப. 03.14 வரை
உத்திராடம் மு.ப. 03.43 வரை
குளிகை மு.ப. 03.00-04.30
இராகுகாலம் 04.30- 06.00
சுபநேரம் காலை 06.30 - 07.30
எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாந்தம் | சிரமம் | களிப்பு | உயர்வு | பகை | வரவு | ஆர்வம் | பாசம் | கவனம் | உழைப்பு | யோகம் | பணிவு |

# ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அவசியம்

## சமல் எம்.பியின் ஆசை



கொழும்பு, மே.06

நாட்டை ஸ்திரப்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச கூறியுள்ளார்.


கண்டி பிரதேசத்தில் வைத்து நேற்று ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“பல்வேறு காரணங்களுக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருக்க வேண்டும் என விரும்புகின்றேன்.

நாட்டில் இடம்பெறுகின்ற சில நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறான அதிகாரம் உள்ள ஜனாதிபதி நாட்டில் இருந்திராவிட்டால் இன்று நாட்டின் சிறு துண்டு கூட எஞ்சியிருக்காது.

தற்போதைய அரசாங்கம் கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காக மட்டுமே செயற்பட்டுள்ளது. மாறாக நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்வதற்காக அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை” என்றும் சமல் ராஜபக்ச கூறியுள்ளார். (அ)

## மகிந்த அணிக்கு காலி இல்லையாம்



கொழும்பு, மே.06

காலி முகத்திடலில் மே தினப் பேரணியை நடத்துவதற்கு, கூட்டு எதிரணிக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

இலங்கையில் மேதினப் பேரணிகள் எதிர்வரும் 7ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

இந்தநிலையில் காலி முகத்திடலில் பேரணியை நடத்த கூட்டு எதிரணி திட்டமிட்டிருந்தது.

ஆனால், காலிமுகத்திடலில் கூட்டு எதிரணியின் பேரணிக்கு அரசாங்கம் அனுமதி அளிக்க மறுத்துள்ளதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையில் முதன்முதலாக சர்வதேச இறப்பர் மாநாடு

கொழும்பு, மே.06

சர்வதேச இறப்பர் மாநாடு இம்மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கவின் தலைமையில் சர்வதேச இறப்பர் ஆய்வுக்குழுவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2018 இறப்பர் மாநாடு “தடைகளை முறியடித்து நிலையான அபிவிருத்தியை நோக்கி”என்ற தலைப்பில் இம்முறை முதல் முறையாக இலங்கையில் நடைபெறவுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, 36 அங்கத்துவ நாடுகளின் பங்களிப்புடன் எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இறப்பர் தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட இறப்பர் உற்பத்தி நாடுகள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், இரசாயன துறையைச் சார்ந்தோர், தயாரிப்பாளர்கள், தனியார் துறையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைப் பிரதிநித்துவப்படுத்தி பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெற்காசியாவில் முக்கிய கேந்திர நிலையமாக இலங்கை வளர்ச்சியடைந்து வருவதினால் இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுவது மாத்திரமன்றி உலகின் இறப்பர் துறையில் இறப்பர் கேந்திர நிலையமாக இலங்கை எதிர்காலத்தில் திகழும் என்பதினால் இந்த மாநாடு சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சின் ஆலோசகர் லக்ன பரனவிதான தெரிவித்தார். (அ)

## ஆற்றில் மூழ்கி மாணவன் சாவு

கொழும்பு, மே 06

அகுரெஸ்ஸ - அதுரலிய - கதனாவல கங்கையில் நீரில் மூழ்கி பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பர்களுடன் குறித்த ஆற்றில் அவர் நீராடச் சென்றிருந்த போது குறித்த மணவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பின்னர் பிரதேச மக்கள் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போது, மாணவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதுரலிய கல்லூரியில் கல்வி கற்ற 16 வயதுடைய மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

## மாணிக்கக் கல் எடுத்தோர் பொலிஸிடம் சிக்கினர்

கொழும்பு, மே.06

திம்புள்ள பத்தனைப் பகுதியில் வீடு ஒன்றின் கொல்லைப்புறத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வரை பத்தனைப் பொலிஸார் நேற்று முன்தினம் சுற்றி வளைத்துக் கைது செய்துள்ளனர்.

குறித்த வீட்டின் பின்புறத்தில் அவிசாவளையில் இருந்து வந்து தங்கியிருந்த நான்கு நபர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து மாணிக்கக் கற்கள் அடங்கிய மண்ணைக் கொண்டு வந்து, வீட்டின் பின்பகுதியில் இரகசியமான முறையில் அந்த மண்ணில்இருந்து மாணிக்ககற்களை பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து விரைந்த பொலிஸார் அந்த வீட்டைச் சுற்றிவளைத்தனர். பின்னர் சந்தேக நபர்களை மாணிக்கக் கற்கள் அகழும் உபகரணங்களுடன் கைது பொலிஸார் செய்துள்ளனர். (அ)

# அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக மேற்கொள்க!

## ஹக்கீம் கோரிக்கை



கொழும்பு, மே.06

“அரசியல் யாப்பு சீர்திருத்தம் பூரணமாக நடைபெற வேண்டும். சில தேவைகளுக்காக கட்டம் கட்டமாக நடைபெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியலமைப்பின் ஏனைய விடயங்களும் உள்ளடங்கலான முழுமையான சீர்திருத்தம் கொண்டுவரப்படுவதையே ஆதரிப்போம் “ என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி நீர் வழங்கல் திட்டங்களை விரைவுபடுத்தும் நோக்கில் கெட்டம்பே நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“ நாட்டின் அதிகாரப் பகிர்வு முறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தமான வேண்டுகோளை சிறுபான்மை கட்சிகள் முன்வைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதனை வலியுறுத்தி வருகின்றனர்.

அரசியலமைப்பின் வழி நடத்தல் குழு பிரதமர் தலைமையில் நாடாளுமன்றத்தில் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தி, புதிய யாப்பை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை மாற்றுகின்ற 20ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும். அத்துடன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதற்கான முயற்சியை ஏற்றுக் கொள்ள முடியாது போன்ற விடயங்களை உள்ளடக்கி, சிறுபான்மைக் கட்சிகள் எல்லோரும் கூட்டாக ஒரு அறிக்கையை விடுத்துள்ளோம்” என்றும் ஹக்கீம் தெரிவித்தார். (அ)

## இராட்சதக் குளவிக்கூடுகள் விபுலானந்தாவில் தகர்ப்பு

வவுனியா, மே.06

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியில் பல மாதங்களாக மாணவர்களை அச்சுறுத்தி வந்த, இராட்சதக் குளவிக்கூடுகள் நேற்று முன் தினம் இரவு முற்றாக அகற்றப்பட்டுள்ளன.

சுமார் 2000இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் அண்மைக் காலமாக ஆபத்தான குளவிகள் கூடு கட்டி வருவதாகவும், அதனைத் தம்மால் அழிக்க முடியாதுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்து திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றுக்கு கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபர் உத்தியோகபூர்வமாகத் தகவல் வழங்கியிருந்தார். ஆனால் அவர்கள் இது வரையிலும் எவ்வித நடவடிக்கையும்





மேற்கொள்ளவில்லை.

இதனையடுத்து , குறித்த குளவிக்கூடுகளை பாடசாலை நிர்வாகத்தினர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பண்டாரிக்குளம் சிவில் பாதுகாப்பு குழுவினர் என்போர் ஒன்றிணைந்து, பண்டாரிக்குளம் கிராம சேவகரின் ஒத்துழைப்புடன் நேற்று முன் தினம் இரவு 7.00 மணி தொடக்கம் 11 மணி வரை சுமார் 4மணி நேர பலத்த போராட்டத்தின் மத்தியில் பாடசாலை வளாகத்திலிருந்து அகற்றினர். (அ)

# வீடுகளைச் சீர் செய்யாவிடின் உணவுத் தவிர்ப்புப் போர்

## உயிலங்குளம் மக்கள் கொந்தளிப்பு

முல்லைத்தீவு, மே 06


முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட வீடுகள் மக்கள் வாழ முடியாத நிலையில் இருப்பதாகவும், அதனை திருத்த அதிகாரிகள் முன்வராத பட்சத்தில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை தமுன்னெடுக்கப்போவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நேற்றுமுன்தினம் மாலை துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அதன்போது பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றினையும் அவர்கள் கையளியத்துள்ளனர்.

இந்த மகஜரை பிரதேச செயலாளர் இல்லாத காரணத்தால் நிர்வாக உத்தியோகத்தர் பெற்றுக்கொண்டார்.

பிரதேச செயலாளரிடம் மகஜரைக் கையளித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் தமக்கான தீர்வு கிடைக்கவில்லையெனில் பிரதேச செயலகம் முன்பாக சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக பாதிக்கப்பட்ட மக்கள் இதன்போது தெரிவித்தனர். (அ)



### நீங்கள் திருந்த மாட்டீங்கள். உங்களைத் திருத்தவும் ஏலாது.

அரசியல்வாதி அரசியல்வாதிதான். திருந்தமாட்டாங்கள். நேர்மையாச் செய்வங்கள் எண்டு பாத்தால் அவங்களும் பிரட்டுறாங்கள். எலக்சனுக்குப் பிறகு கனநாளா றோட்டுக்கடை ஒண்டையுங் காணேல்லை. இப்ப என்னெண்டால், இரண்டு மூண்டு நாளா, திரும்பவும் றோட்டுக் கரையிலை கடையளைப் போட்டு வியாபாரம் நடக்குது. உள்ளூராட்சிச் சபையள் வந்த உடனை உப்பிடியான சட்டவிரோதமான கடையளை எல்லாம் நடத்த விடக்குடாது எண்ட விதமாக் கதைச் சவையள். சில சபையள் அதைச் சட்டமாக்கியும் போட்டினம். ஆனால் வியாபாரியள் சொல்லுக் கேக்கிறமாதிரியும் இல்லை. "புதுத் தும்புத்தடி நல்லாக் கூட்டும் எண்டுதான் கேள்விப்பட்டிருக்கிறம். ஆனால் அது கூட்டத்துவங்க முன்னமே தும்பு கழண்டு கொட்டுதெல்லே. உள்ளூராட்சிச் சபையளைப் பற்றித்தான் கதைக்கிறம்.

இதைப் போனைப்போட்டு ஒரு உள்ளூராட்சிச் சபை சேர்மனிட்டை என்ன நடக்குது எண்டு கேட்டம். அவர் என்ன சொல்லுறார் எண்டால் எங்கடை சபையிலை போன கூட்டத்தண்டு இப்பிடியான கடையளைப் போட விடாமல் நிப்பாட்டுற மாதிரிக் கதைச்சனாங்கள். ஆனால் அதுக்கு மெம்பர்மார் ஒத்துக் கொள்கினமில்லை. அப்பிடி நிப்பாட்டினால் அதாலை உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவினமாம் எண்டு, தீர்மானத்தை ஒத்திப் போட்டிருக்காம்.

இல்லைத் தெரியாமல்தான் கேக்கிறம். கண்டியிலை இருந்து கொண்டு வந்து கால்மிதி விக்கிறவையள் உள்ளூர் உற்பத்தியாளரே? கொழும்பிலை இருந்து வந்து அரைக்காற் சட்டைச் சேட்டு விக்கிறவை உள்ளூர் உற்பத்தியாளரே? இரண்டாம் நம்பர் லெதர் பாக்கைக் கொண்டு வந்து ஒருதன் விக்கிறான். கேட்டால் மல்வானையிலை இருந்து வந்ததெண்டு சொல்லுறான். உள்ளிச் செட்டை அளவு மெல்லிய தகட்டிலை அலுமாரியை அடிச்சுக் கொண்டு வந்து விக்கிற ஆளிட்டைக் கேட்டால் தான் வத்தளையிலை இருந்து கொண்டு வந்தனான் எண்டு சொல்லுறான். சோத்தி மரத்திலை செய்து கொண்டு வந்து கதிரை மேசை செற்றியள் எண்டு விக்கிறவன் தான் மொறட்டுவையிலை இருந்து வந்தவன் எண்டு சொல்லுறான். அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரியிலை கழிச்ச மெத்தையளை வாங்கி அந்தப் பஞ்சைக் காய வைச்சு அதைப் புதுத்துணியிலை அடைஞ்சு கொண்டு வந்து ஏமாத்தி விக்கிறவன் உள்ளூர் உற்பத்தியாளரே? பிளாஸ்ரிக் விக்கிறவங்கள் எங்கையோ இருந்து கொண்டு வந்து படு கேவலமான சாமான்களை எங்கடை சனத்தின்ரை தலையிலை கட்டிப்போட்டுப் போறாங்கள். அது என்ன வியாபாரம்? அப்பிடி உள்ளூராக்கள்தான் நிண்டு விக்கினமெண்டால் அந்தக் கடையளுக்குப் பின்னாலை ஒரு கதையே இருக்கு. கேட்டால் விறைச்சுப் போய்விடுவியள். பெரிய பின்னணி. அதாலை உள்ளூராட்சி சபையளிலை உள்ளவையும் யோசிச்சுத்தான் செய்வினம்.

அப்பிடி வியாபாரம் செய்யிற ஆக்களிட்டைக் கேட்டால் பிரதேச சபையளிலை காசுகட்டித்தான் வியாபாரம் செய்யிறம் எண்டு சொல்லினம். முந்தி சபையள் இல்லாமை அதிகாரியள் சபையை இயக்கினபடியாலை அவையள் தங்கடை எண்ணத்துக்கு ஒரு நாளைக்கு வெறும் 200 ரூபா காசை வேண்டிக் கொண்டு கடையைப் போடவிட்டினம். அதாலை பாதிக்கப்படுகிறது உண்மையாத் தங்களைப் பதிவு செய்து வியாபாரம் நடத்திற ஆக்கள்தான் எண்டதை சபையிலை உள்ளவைக்கு விளங்கேல்லையோ? லைற்றுக்கு, கடை வாடகைக்கு, சம்பளகாரருக்கு எண்டு குடுத்து வியாபாரம் செய்யிறவை என்ன காதிலை பூ வைச்ச கந்தசாமியளோ? சனமும் தரமில்லாத சாமானை வேண்டி ஏமாத்துப்படுகினமெல்லே. அதாலை உடனடியா ஏதாச்சும் செய்யுங்கோவன் தம்பிமார்?

**- வில்லங்கம் விநாசி**

மைத்திரி தலைமையிலான

# மேதினப் பேரணிக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்




மட்டக்களப்பு, மே 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மே தின நிகழ்வுக்கு எதிராக அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அரச சார்பற்ற ஒன்றியமான இணையம் காரியாலயத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"எமது உறவுகளை படுகொலை செய்வதிலும், காணாமல் போகச் செய்ததிலும் பெரும்பங்காற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இம்முறை மட்டக்களப்பில் தமது மே தின நிகழ்வினை நடத்துவதற்கு நாம் எமது எதிர்ப்பினைத் தெரிவிக்கவுள்ளோம்.

அந்த வகையில் மே தினம் நடைபெறும் பகுதியில் அன்றைய தினத்திலேயே அமைதியான முறையில் எமது கவன ஈர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வடக்கில் நடத்தப்படவுள்ளது. யாழ். பல்கலைக்கழகம், காணாமல்போனவர்கள் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் அனைத்து தரப்பினரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# பணிப்பாளர் பதவி பறிபோனது

கொழும்பு, மே.06

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பணியை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர்முஸ்தபாவினால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான தெற்காசிய கனிஷ்ட தடகள போட்டிக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு ஆலோசகர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகளை சரியான முறையில் செய்து கொடுக்கத் தவறியதன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடு காரணமாக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த வீர, வீராங்கனைகள் முகங்கொடுத்துள்ள அசௌகரியத்தை கருத்திற்கொண்டு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பணியை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு

# வடக்கு ஆளுநர் நேற்று வழங்கினார் நியமனம்





யாழ்ப்பாணம், மே.06

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 23 பேருக்கு வட மாகாண ஆளுநரால் நியமனங்கள் நேற்றுக் காலை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் அலுவலத்தில் நேற்று நடைபெற்றுள்ளது. இதன்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கே நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஆட்சியைக் கைப்பற்ற முனைப்புக் காட்டுங்கள்

## பொது எதிரணிக்கு மகிந்த ஆலோசனை

கொழும்பு, மே.06

'தேசிய அரசுக்கு எதிராகப் பெருமெடுப்பில் பிரசாரத்தை மேற்கொண்டு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ளும் முனைப்புடன் பொது எதிரணி செயற்படவேண்டும்' என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கும், பொது எதிரணியினருக்குமிடையில் நடைபெற்றுள்ள முக்கிய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'தற்போதைய அரசு, தலைமைகளை மாற்றி ஒருவரை ஒருவர் மகிழ்விப்பதன் மூலம் அதிகாரத்தில் நீடிக்கப் பார்க்கின்றது. என்னதான் மாற்றங்களைச் செய்தாலும் முன்னோக்கிப் பயணிக்கமுடியாது.

நாங்கள் செல்லும் இடமெல்லாம் அரசைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு மக்கள் கேட்டுக்கோள்கின்றனர். கட்சி பேதம் மறந்து அரசை மக்கள் எதிர்க்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்ளும் பாரிய எதிர்ப்புச் செயற்பாட்டை பொது எதிரணி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க வேண்டும்' எனவும் மகிந்த ராஜபக்ச இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, காலியில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள பொது எதிரணியின் மே தினக் கூட்டத்தில் ஒரு இலட்



சத்துக்கும் அதிகமான மக்களைப் பங்கேற்க வைக்கவும் இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப் பட்டுள்ளது. (இ)

# தொடர்ச்சிகள்

### திருமலைத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குச் சென்றிருந்த போது, பிரதமர் ஷின்சோ அபேயுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய, இலங்கையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கே இந்தச் சிறப்புக் குழு இலங்கைக்குவந்துள்ளது.

இந்தக் குழுவினருடனான சந்திப்பின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்சக்தித் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் மின்சார நெருக்கடி ஒன்று ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதால் அவசர கதியில் மின்சக்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்போதே, ஜப்பானிய உதவியுடன் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம், கிழக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இலங்கை அரசு சீனாவுக்குத் தாரை வார்த்துவிட்டதாகக் கூறப்படும் நிலையில், திருகோணமலையை அபிவிருத்தி என்ற போர்வையில் அரசு ஜப்பானுக்கு க்கொடுக்க இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ)

### யார் செயலாளர்?... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த ரவீந்திரன் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் குறித்த பதவிக்கு நீண்ட நாட்களாக எவரும் நியமிக்கப்படவில்லை. கல்வியமைச்சின் செயலாளர் நியமனத்தில் வடக்கு ஆளுநருக்கும், மாகாணக் கல்வியமைச்சர் சர்வேஸ்வரனுக்கும் இடையிலான இழுபறி காரணமாகவே இந்த நிலை தோன்றியிருந்தது. சத்தியசீலனை கல்வியமைச்சின் செயலாளராக்க ஆளுநர் விரும்பிய போதும், க.தெய்வேந்திரனையே அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டுமெனக் கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் விடாப்பிடியாக நின்றார். இதனால் யார் கல்வியமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்படுவார் என்பது குறித்து, ஒரு தீர்வு கிட்டவில்லை.

இந்த நிலையில் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளராக எஸ்.சத்தியசீலனையும், விவசாய அமைச்சின் செயலாளராக க.தெய்வேந்திரனையும் ஆளுநர் நியமித்துள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

இதேவேளை, "கல்வியமைச்சின் செயலாளர் பதவிக்குப் பொருத்தமான அதிகாரியை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடன் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் எஸ்.சத்தியசீலன் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி" என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### மாட்டிறைச்சிக்கடை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 11.30 மணியளவில் இனந்தெரியாத குழு ஒன்றால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

குறித்த இறைச்சிக் கடை வலி.கிழக்கு பிரதேச சபையினரால் நிர்வகிக்கப்படும் நிலையில், சம்பவம் குறித்து கடை நடத்துபவரால் வலி.கிழக்கு பிரதேச சபையினருக்கு அறிவிக்கப்பட்டதுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. தீக்கிரையாக்கப்பட்ட கடைக்கு அருகில் இன்னுமொரு மாட்டிறைச்சிக் கடையும் உள்ளது. அதற்கு எந்த சேதமும் ஏற்படுத்தப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. (அ)

### சூரிய வெப்பம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வெப்பநிலை உடலுக்குத் தீங்கானதாக அமையாத வகையில் பொது மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

### மாகாண சபையைத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஆரம்பகாலங்களில் புலிகள் மாகாண சபை முறைமையை நிராகரித்திருந்தார்கள். அது அவர்களுடைய அரசியல் நிலைப்பாடாகும்.

அதன்பின்னர் நெருக்கடிகள் நிறைந்த சந்தர்ப்பத்திலும் அதைப் பொறுப்பேற்று நிர்வாகம் செய்தவர்கள் அதனைச் சரியாக நிர்வகிக்காததன் விளைவாக அது செயலற்றுக் கிடந்தது.

இந்தக்காரணங்களால் தமிழ் மக்களது பெரும் தியாகங்களுக்கு மத்தியில் கிடைக்கப்பெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பலாபலன்களையும், மாகாணசபையின் நன்மைகளையும், இறுதி இலக்கை நோக்கி பயணிக்கும் வாய்ப்பினையும் தமிழ் மக்கள் இழந்திருந்தனர்.

நெருக்கடியற்ற ஒரு சூழ்நிலையில் அந்தவாய்ப்பு மீண்டும் தமிழ் மக்களை நோக்கி வந்தபோது சந்திரனை கொண்டுவந்து அருகில் தருவோம், நட்சத்திரங்களை உடைத்துத் தருவோம் என உணர்ச்சிப் பேச்சுக்களைப் பேசி அதிகாரங்களைப் பெற்றவர்கள் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பையும் சரியாக நிர்வகிக்கவில்லை.

அவர்கள், குற்றச்சாட்டுக்களையும் குறைகளையும் முன்வைப்பதனூடாக தமது இயலாமையை வெளிப்படுத்துகிறார்களே தவிர மாகாணசபையின் உச்ச பலாபலன்களை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வதற்காக அர்த்தமுள்ள முயற்சிகளையோ அல்லது விருப்பமுடனோ செயற்படவில்லை.

இவ்வாறு முடங்கிக் கிடக்கும் மாகாணசபை முறைமையை மீண்டும் திறம்பட செயற்படுத்துவதற்கு மீண்டும் தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பு வெகு விரைவில் வரவுள்ளது. அதை தமிழ் மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் மக்களோடு வாழ்ந்து, மக்களுக்கான சேவைகளைச் செய்தவர்கள் என்ற அடிப்படையில் ஈ.பி.டி.பியின் கரங்களுக்கு வடக்கு மாகாண சபை கிடைக்கப்பெறுமாக இருந்தால் நான் ஏற்கனவே கூறியதுபோல எமது தாயகப் பிரதேசத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியமைப்பதுடன், எமது மக்களது பொருளாதார வறுமைகளை இல்லாதொழித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வை அடையும் திசை நோக்கி வழிநடத்துவேன் என்ற நம்பிக்கையும், அதற்கான உழைப்பும், உள்ளார்ந்த விருப்பும் எம்மிடம் உள்ளது.

இந்த அடிப்படையிலேயே நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று விரும்புகின்றேன். நான் மக்களை விட்டு ஓடியதும் இல்லை இனி ஓடப் போவதும் இல்லை என்பதோடு குறைகூறிக் கொண்டு இருக்கவும் போவதில்லை.

மாகாணத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும்போது மத்திய அரசுகளை எவ்வாறு கையாளவேண்டும் என்ற நீண்டநாள் அனுபவம் எனக்குண்டு.

இதற்கிணங்கவே ஈ.பி.டி.பியின் வெற்றி மக்களின் வெற்றி, மக்களின் வெற்றி ஈ.பி.டி.பியின் வெற்றி என்று கடந்த தேர்தலில் நான் கூறியிருக்கின்றேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

### பொலிஸ்க்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நேற்று முழுதும் பரபரப்பு ஏற்பட்டது.

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக நாரந்தனை மத்திய பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ய உப பொலிஸ் பரிசோதகர் உட்பட மூன்று பொலிஸார் சென்றுள்ளனர். சந்தேக நபரின் வீட்டில் வைத்து அவரைக் கைதுசெய்யப் பொலிஸார் முயற்சித்த போது அவர் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார். அதனால் அவருக்கும், பொலிஸாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அப்போது சந்தேக நபர் திடீரெனத் தன்னிடம் இருந்து கத்தியால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் காலில் வெட்டி, காயத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபரின் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தப்பியோடிய சந்தேக நபரைக் கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

### கள்ளத் தோணியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், அகதிகளை ஏற்றிக் கொண்டு வந்த தமிழகத்தைச் சேர்ந்த படகோட்டியும் அடங்குவதாகக் கடற்படை அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகள் மற்றும் மலேரியா தடுப்புப் பரிசோதனையின் பின்னர் காங்கேசன் துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

### புதிய அரசியலமைப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணியும் புதிய அரசியலமைபுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியாமல் அரசியலமைப்புத் தோல்வியடையக் கூடும் என்ற அச்சத்தாலேயே இந்த முடிவுக்கு அரசாங்கம் வர இருப்பதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் தற்போதுள்ள அரசியலமைப்பு உருவாக்க நிலை முன்னேற்றமடையுமா? இல்லையா? என்பது குறித்து மே, ஜூன் மாதங்களுக்கிடையில் எமக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அப்படி முன்னேற்றம் காணப்படுவதாக இருப்பின், 2018 ஆம் ஆண்டுக்குள் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் அரச நிர்வாகத்தை முடக்கும் போராட்டத்தை ஆரம்பிப்போம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்திருந்தது.

அதேவேளை, சர்வதேச மட்டத்தில் இருந்தும் புதிய அரசியலமைப்பு உருவாக்க நடவடிக்கைகளைத் துரித கதியில் முன்னெடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் அதிகரித்தது.

இவற்றின் காரணமாகவே முடங்கிக் கிடந்த புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளைத் துரித கதியில் மேற்கொண்டு, 2018 ஆம் ஆண்டுக்குள் அதனை நடைமுறைக்கு கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

### தந்ததைத் திருப்பி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 01ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சராக மனோ கணேசன் பதவிப் பிரமாணம் செய்திருந்தார். இதன்போது அதுவரை காலமும் ஜனாதிபதியின் கீழ் நிர்வகிக்கப்பட்ட நல்லிணக்கச் செயலணி மற்றும் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு என்பனவும் அமைச்சர் மனோ கணேசனிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவை மீண்டும் தன்னிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை, மனோகணேசனுக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சுப் பதவிகளின் சில அதிகாரங்களை ஜனாதிபதி மீளப் பெற்றுக் கொண்டால் நல்லது என அமைச்சர்கள் சிலர் முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார்கள் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### எரிபொருளும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவில்லை. எனினும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இதற்கு ஒப்புதலளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் சூத்திரத்தின் அடிப்படையில் அல்லாமல், பெற்றோலின் விலையை 15 ரூபாவாலும் டீசலின் விலை 10 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளிக்கும் என நிதி அமைச்சின் உயர்மட்டம் தெரிவித்தது. (அ)

### வாள் வெட்டுக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதடி மற்றும் நுணாவில், வவுனியா பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்களே இவ்வாறு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து நான்கு வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுன்னாகம் பகுதியில் வாள் வெட்டினை மேற்கொள்வதற்கு குறித்த கும்பல் முயன்றுள்ளது. அது குறித்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், சுன்னாகம் பொலிஸார் அதிரடியாக இறங்கி குறித்த ஐவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பல வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும், அவர்களை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)



# புழுதிப் புயல் அபாயம் இன்னும் நீங்கவில்லை

புதுடெல்லி, மே 06

இந்தியாவில், உத்தர பிரதேசம் உள்ளிட்ட 4 மாநிலங்களுக்குத் தொடர்ந்தும் புயல், மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதே வேளை, கடந்த புதன்கிழமை வீசிய புழுதிப் புயலுக்கு பலியானோர் எண்ணிக்கை 124 ஆக உயர்ந்துள்ளது.

உத்தர பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடந்த புதன்கிழமை இரவு கடும் புழுதிப் புயல் வீசியது. பல இடங்களில் பலத்த மழையும் பெய்தது. புயல், மழைக்கு பலியானோர் எண்ணிக்கை 124 ஆக உயர்ந்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 73 பேர் இறந்துள்ளனர்.

மேலும் 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 1,400க்கும் மேற்பட்ட கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உத்தர பிரதேசம், ஒடிசா, பீஹார், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்களுக்கு பலத்த மழை, புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதை மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் திரிபுரா ஆகிய மாநிலங்களிலும் உட்பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)



# நாள் பார்த்தாச்சு!

வோஷிங்டன், மே.06

வடகொரியா ஜனாதிபதியுடன் பேசும் இடம் மற்றும் திகதி உறுதியாகிவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக விரோதிகளாக இருந்து வந்த தென் கொரியா-வடகொரியா நாட்டின் தலைவர்கள் சமீபத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டனர். அந்தச் சந்திப்பின் போது இரு நாட்டுத் தலைவர்களாலும் சில முக்கிய முடிவுகளை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இதற்கு முன்னரே வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஆகியோர் நேருக்கு நேர் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன.

இதற்காக பல்வேறு நாடுகள் பரீசிலனையில் இருந்தன. அது மட்டுமின்றி இந்தச் சந்திப்பு நடைபெறும் திகதி மற்றும் இடம் ஆகியவை முடிவு செய்யப்படாமல் இருந்தது.

இதற்கிடையில், டிரம்ப், "வடகொரியா- தென்கொரியா ஜனாதிபதிகள் சந்தித்துப் பேசிய பன்முன்ஜோம் எல்லைப்பகுதியில் உள்ள பீஸ் ஹவுஸ் என்ற கட்டடத்தில் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னைச் சந்தித்துப் பேச விருப்பம் உள்ளது" என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில் டிரம்ப், வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்தித்துப் பேசப்போகும் திகதியும், இடமும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்த அதிகார பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் தெரிவித்துள்ளார். (அ)

# வரவேற்பால் மகிழ்ச்சி



சென்னை, மே.06

நடிகை இந்துஜா, 'மெர்க்குரி' படத்தில் தனது நடிப்புக்கு கிடைத்த வரவேற்பால் மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார். "முதலில் தமிழகம் தவிர மற்ற இடங்களில்தான் 'மெர்க்குரி' திரைப்படம் வெளியானது. எப்போது இங்கு வெளியாகும் என்று காத்திருந்தேன். அதன் பிறகுதான் 'லப்டப்' என்ற இதயத் துடிப்புச் சத்தம் குறைந்தது. இது, 'மேயாத மான்' படத்தை தொடர்ந்து வெளியான படம். இனி அடுத்தடுத்து வரும் எல்லாப் படங்களிலும் ஏதாவது தனித்துவம் இருக்கும். மொடேர்ன், கவர்ச்சி விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன். ஆர். கண்ணன் இயக்கத்தில் உருவாகிவரும் 'பூமராங்' படத்தில் நான் சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கவேண்டியுள்ளது. அது விரைவில் தொடங்கும். இன்னும் ஏழெட்டு நாட்கள்தான் நடிக்க வேண்டி உள்ளது. அதைத் தொடர்ந்து, உதயநிதியுடன் இணையும் புதிய படமும் இம்மாத இறுதிக்குள் தொடங்கும். சினிமா வாழ்க்கை மகிழ்ச்சியாக நகர்கிறது" என்கிறார் இந்துஜா.

# மன்னிப்பு

ஜெருசலேம், மே.06

யூத மக்களைப் பற்றியும், யூத இனப்படுகொலை பற்றியும் தான் தெரிவித்த கருத்துகளுக்கு பலஸ்தீனத் தலைவர் முகமது அப்பாஸ் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

'யூத இனப்படுகொலை, வரலாற்றில் நிகழ்ந்த மிகவும் கொடியதொரு குற்றம்' என்று வெள்ளிக்கிழமை அவருடைய அலுவலகம் வெளியிட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில், மேற்கு கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய முகமது அப்பாஸ், ஐரோப்பாவில் யூதர்கள் பெருமளவில் கொல்லப்பட்டது யூத இன எதிர்ப்பால் இல்லை, அவர்களின் நிதிச் செயற்பாடுகளால் ஏற்பட்ட விளைவு என்று தெரிவித்திருந்தார்.



"வட்டி, வங்கி போன்றவைகளை யூதர்களின் சமூக செயற்பாடுகளாக அப்பாஸ் விவரித்திருந்தார்.

பலஸ்தீனத் தலைவர் முகமது அப்பாஸ் யூத இனப்படுகொலை பற்றி தெரிவித்த கருத்து, யூதர்களுக்கு எதிரானது என்று இஸ்ரேலிய அரசியல்வாதிகளும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கண்டித்திருந்தனர். இதனையடுத்தே அவர் தனது கருத்துக்கு மன்னிப்புக் கேட்டுள்ளார். (அ)

# கலிபோர்னியாவில் சூடு

கலிபோர்னியா, மே 06

வடக்கு கலிபோர்னியாவில் அடுக்குமாடி குடியிருப்பில் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர், கடந்த வியாழக்கிழமை மதியம் 3.30 மணியளவில் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். இதில் பெண் ஒருவர் பலியானார்.

மற்றொருவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரும் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்துவிட்டார். (ஆ)

# நோபல் பரிசு இம்முறை இல்லை

சுவீடன், மே 06

உலகிலேயே மிகவும் மதிப்புமிக்க விருதாகக் கருதப்படும் நோபல் பரிசு 2018 ஆம் ஆண்டு யாருக்கும் வழங்கப்படமாட்டாது என்று பரிசு வழங்கும் அமைப்பு அறிவித்துள்ளது.

பாலியல் புகார்கள், நிதி மோசடிகள் காரணமாக இந்த ஆண்டு விருது வழங்குவதும், தேர்வு செய்யப்படுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விருது வழங்கும் அமைப்பு அறிவித்துள்ளது.

18 பேர் கொண்ட நோபல் பரிசு தேர்வாளர்கள் குழுவில் இருக்கும் உறுப்பினரும், கவிஞருமான காத்தீரனா பிராஸ்டென்சனின் கணவர் ஜீன் கிளாட் ஆர்னோல்ட் ஒரு புகைப்படக்கலைஞர். பிரெஞ்சு நாட்டவரான இவர் மீது 18 பாலியல் புகார்கள் எழுந்தன.

மேலும், நோபல்பரிசு அறிவிக்கும் முன்பே அவர்களின் பெயர்களை வெளியிட்டதாகப் புகார்களும் எழுந்தன. இது குறித்து சுவீடன் நாளேடுகளில் கடந்த நவம்பர் மாதமே செய்தி வெளியானது.

ஆனால், இதை ஆர்னோல்ட் மறுத்தார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்று காத்தரீனா பிராஸ்டென்சன் பதவி விலகக் கோரிக்கைகள் எழுந்தன. ஆனால், அவர் மறுக்கவே, எதிர்ப்புத் தெரிவித்து உறுப்பினர்கள் குழுவில் உள்ள 3 பேர் பதவியை ராஜினாமாச் செய்தனர்.

கடந்த மாதம் 12- ஆம் திகதி இந்தப் புகார்கள் அனைத்தும் வெளியே பகிரங்கமானதால், கடும் எதிர்ப்புக் கிளம்பியது, தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கும் இடையே கருத்து மோதல்கள் எழுந்தன. இதன் காரணமாக அகடமியின் நிரந்த செயலாளர் சாரா டேனியஸ் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனால், நோபல் பரிசுக் குழுவுக்கு எதிராக சுவீடன் முழுக்க பெரும் போராட்டம் வெடித்தது.

இதன் காரணமாக 2018 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் 2019ஆம் ஆண்டுடன் சேர்த்து நோபல் பரிசு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசு வழங்கத் தொடங்கியதில் இருந்து பாலியல், நிதிமோசடி ஆகிய காரணங்களால் இது வரை நிறுத்தப்பட்டதில்லை. ஆனால், முதலாம், 2 ஆம் உலகப் போரின் போது பரிசுகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக 1914, 1918, 1935, 1940, 1941, 1942, மற்றும் 1943 ஆகிய ஆண்டுகளில் நோபல் பரிசு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

# வெடித்தது எரிமலை

ஹவாய், மே.06

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் 24 மணி நேரத்தில் தொடர்ந்து 250 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அங்கு கிலேயுவா என்னும் எரிமலை வெடித்துள்ளது. நகரங்களுக்குள்ளேயும் எரிமலைக் குழம்பு பீறிடத்தொடங்கியது. வீதிகளில் விரிசல்கள் விழத்தொடங்கியதையடுத்து எந்நேரத்திலும் எரிமலைக் குழம்பு வெளியேறலாம் என்பதால் 10,000 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

தீவுவாசி ஒருவர் 150 அடி உயரத்துக்கு விண்ணில் எரிமலைக் குழம்பை எரிமலை கக்கியதைக் கண்டதாகக் கூறினார். பல இடங்களைக் கரும்புகை சூழ்ந்துள்ளது. தற்போது நிலப்பரப்பை உடைத்துக் கொண்டு எரிமலைக் குழம்பு வெளி வரும் வீடியோ ஒன்றும் வெளியாகி உள்ளது.

வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டவர்கள் தங்குவதற்காக அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் ஒரு அவசர கால முகாம் ஒன்றை அமைத்துள்ளது.

ரிக்டர் அளவில் 6.9 ஆக பதிவான நில நடுக்கம் ஒன்றையடுத்து எரிமலை வெடித்தது. தொடர்ந்து சில நாட்களாகவே நில நடுக்கங்கள் ஏற்பட்டு வந்ததைத் தொடர்ந்து நிலவியலாளர்கள் கிலேயுவா எரிமலை வெடிக்கும் என்பதை மிகச் சரியாகக் கணித்தனர். மேலும் எரிமலை வெடிப்புத் தொடரலாம் என்பதால் நாளொன்றுக்கு 500 முதல் 2000 பேர் வரை சுற்றுலா வரும் இடமான ஹவாய் தீவுகளுக்கு செல்ல சுற்றுலாப்பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (அ)

எதிரொலி
Ethiroli

ஞாயிறு 06 மே 2018

# பெங்களூரை நசுக்கியது சென்னை



புனே, மே. 06

புனேயில் நடைபெற்ற ஆட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரின் 35ஆவது ஆட்டம் புனேயில் நேற்று முதல் ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஜடேஜா (3 விக்கெட்) மற்றும் ஹர்பஜன் சிங் (2 விக்கெட் ) ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சால் 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது. இதில் பார்த்தீவ் பட்டேல் 53 ஓட்டங்களையும், டிம் சவுத்தி 36 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுக்க ஏனைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து, 128 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வட்சன், அம்பதி ராயுடு ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள்.

வட்சன் 11 ஓட்டங்களை பதிவு செய்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 21 பந்தில் 25 ஓட்டங்களைச் சேர்க்க அம்பதி ராயுடு 25 பந்தில் 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஐபிஎல் தொடரில் அறிமுகமான த்ருவ் ஷோரே 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

பின்னர் டோனியுடன் வெய்ன் பிராவோ ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. இதில் டோனி தொடர்ச்சியாக மூன்று சிக்ஸர்களை அடித்து இரசிகர்களை மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தினார்.

18 ஆவது பந்துப்பரிமாற்றத்தின் கடைசிப் பந்தில் பிராவோ ஒரு ஓட்டத்தைப் பெற சென்னை சூப்பர் கிங்ஸ் 18 பந்துப்பரிமாற்றங்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. டோனி 23 பந்தில் 31 ஓட்டங்களையும், பிராவோ 17 பந்தில் 14 ஓட்டங்களையும் எடுத்து இறுதி வரை களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 10 போட்டிகளில் பங்குபற்றி, 7 வெற்றிகளைத் தனதாக்கி 14 புள்ளிகள் பெற்று சென்னை சூப்பர் கிங்ஸ் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. (இ)

# அயர்லாந்தின் அணி விபரம் அறிவிப்பு



அயர்லாந்து, மே 06

முதன்முறையாக டெஸ்ட் போட்டியில் விளையாட இருக்கும் அயர்லாந்து அணியின் வீரர்கள் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐசிசி கடந்த ஆண்டு ஜூன் மாதம் அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் சர்வதேச டெஸ்ட் போட்டியில் விளையாட அங்கீகாரம் கொடுத்தது. இதன்படி அயர்லாந்து தன்னுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் டெஸ்டில் பாகிஸ்தானை எதிர்த்துக் களமிறங்குகிறது.

இந்த ஆட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடும் 14 பேர் கொண்ட அயர்லாந்து அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, வில்லியம் போர்ட்டர்பீல்ட் (அணித்தலைவர்), அன்ட்ரீவ் பால்பிர்னி எட் ஜொய்ஸ், டைரோன் கேன், அன்டி மெக்பிரைன், டிம் முர்டாஹ், கெவின் ஒபிரைன், நியால் ஒபிரைன், பாய்ட் ராங்கின், நதன் ஸ்மித், போல் ஸ்டிர்லிங், ஜேம்ஸ் ஷானோன், ஸ்டுவர்ட் தொம்சன், கேரி வில்சன் ஆகியோரே அணிவீரர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர். (இ)



# முதல் மூன்று பதக்கமும் சண்டிலிப்பாய் வசம்

யாழ்ப்பாணம், மே 06

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்ட நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதல் மூன்று பதக்கங்களையும் பெற்றுக்கொண்டது.

யாழ்மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமாகின.

இதில் பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. தர்மிகா 55 நிமிடம் 16.4 செக்கனில் இலக்கை அடைந்து தங்கப்பதக்கத்தையும் அதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சியானா 55 நிமிடம் 46.5செக்கனில் இலக்கை அடைந்து வெள்ளிப்பதக்கத்தையும் அதே செயலகத்தைச் சேர்ந்த எல்.மேரி விதுஷா 56 நிமிடம் 19.8 செக்கனில் முடிவிடத்தை அடைந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதன் மூலம் மேற்படி நிகழ்வில் முதல் மூன்று பதக்கமும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் வசமானது. (அ)

# அவுஸ்ரேலிய ஊடகங்கள் மோசமானவை

## டி வில்லியர்ஸ்



பெங்களூர், மே.06

அவுஸ்ரேலிய ஊடகங்கள் வீரர்களை விமர்சிப்பதில் மிக மோசமானவை என தென்னாபிரிக்க சகலதுறை ஆட்ட வீரரும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி வீரருமான ஏ.பி.டி.வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

சமீபத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியைச் சேர்ந்த, விராட் கோலி, டிவில்லியர்ஸ், சாஹல் ஆகியோர் தனியார் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டனர். இதில் சுவாரஸ்யமான கருத்துகளை வீரர்கள் பகிர்ந்து கொண்டனர்.

அப்போது ஒவ்வொரு நாட்டிலும் ஊடகங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்ற கேள்விக்கு ஏ.பி.டி.வில்லியர்ஸ் பதிலளிக்கையில், ‘என்னைப் பொறுத்தவரை அவுஸ்ரேலிய ஊடகங்கள்தான் மோசமானவை. ஆங்கிலப் பத்திரிகையாளர்களும் மோசமானவர்கள்தான். ஆனால் அவர்களிடம் கொஞ்சம் தெளிவு இருக்கும். அதனால் அவர்கள் தந்திரமான கேள்விகளைக் கேட்பார்கள். அவுஸ்ரேலியப் பத்திரிகையாளர்களிடம் தெளிவு இருக்காது அவர்கள் மோசமானவர்கள்’ எனக் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த விராட் கோலி, ‘நாங்கள் இங்கிலாந்து சென்று விளையாடும்போது அவர்கள் தங்கள் நாட்டு அணியையும், எதிர்த் தரப்பையும் சமமாகப் பார்ப்பார்கள். இரு தரப்பையும் சமமாக விமர்சிப்பார்கள். சொல்லப்போனால் எதிர் அணி வெற்றிபெற்றால் அவர்களின் அணியைவிடக் கூடுதலாகப் பாராட்டுவார்கள்’ எனத் தெரிவித்துள்ளார். (இ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.